OFFICE OF THE REGISTRAR ... 1 - AUG ... MADRAS

ஸ்ரீ

லோகாந்தனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞானாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தம் - கo.] துர்முகிஸு ஆனிமீ. [எண் - சு.

வேதாகமப்பிரகரணம்.

யஜுர்வேத சம்பந்தமான

காத்தியாயன உபநிடதம்.

సహనావవత్వితిశాంతిః.

అథ ప్రణిపత్య కాత్యాయనో బ్రహ్మాణ మన్వయుజ్క్త ।
అధీహి భగవో మే కిం పవిత్రాణాం పవిత్రం ।
యేనవా కర్మాణి సఫలాని యద్దుష్కరం తపోమర్త్యానాం ।
యేన సుకరేణామృతత్వమేతి । సహోవాచ ।

பின்னர், காத்தியாயன மகாரிஷியானவர் பிரம்மாவைப் பணிந்து, ஓ சுவாமி! எது பவித்திரங்களுக்குள்ளே பவித்திரமா யிருப்பதோ, எந்த அனுஷ்டானம் பேறும், பலமுங்கூடியதோ, மனிதர்களுக்கு யாதொரு பரமபதம் சிரமத்தினல் யடையத்தக்கதோ, அதை எவ்வித சுலபத்தினலே யடையலாம் என்று கேட்க, உடனே பிரம்மா சொல்லுவாராயினர்.

సాధు తేన యోగీ శ్రుణు భో పవిత్రం సులభం సుకరం ।
యద్విష్ణు క్షేత్రం తత్ర మృత్స్నాం శ్వేతా ముద్ధృతాని
సుద్ధరేత్ ।

ஓ ரிஷியே! பவித்திரமாயுஞ் சுலபமாயுஞ் சுபகரமாயும் இருக்கிற (ஊர்த்துவ புண்டர) விதி எதுவோ அதைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. ஸ்ரீ விஷ்ணு க்ஷேத்திரங்களிலிருந்து சுவேதமிருத்திகை என்னும் வெண் மண்ணை "உத்ருதாவஸீ" என்கிற மந்திரத்தாலே எடுக்கத்தக்கது.

అమృతమేవ శ్వేతమృత్స్నా భవతి ।
తాం శుద్ధజలేన ప్రణవేన సంకర్షయేత్ ।
దేవ పితృ కర్మాణ్యా రభమాణః ।
తయా నిత్య మూర్ధ్వపుండ్రం బిభృయాత్ ।

அமிர்தமென்ற மோக்ஷ சொரூபியான பகவானே சுவேதமிருத்து சொரூபமாயிருக்கிறன். அந்த சுவேதமிருத்தைப் பரிசுத்தமான தீர்த்தத்தினலே பிரணவ மந்திரத்தைச் சொல்லிக் குழைத்து, தேவ கருமமான சந்தியாவந்தனம், பிதுரு கருமமான சிரார்த்தம் இவற்றின் ஆரம்பத்திலே, குழைத்த அத்திருமண்ணலே நித்தியம் ஊர்த்துவ புண்டரங் தரிக்கக்கடவன்.

మంత్రైః కేశవాదీనాం । తద్రహితం కర్మవిఫలం ।
రక్షాంసి గృహ్ణీయుః । తదేవ మభ్యుక్తం భవతి ।

கேசவன் முதலிய பன்னிரு நாமத்தால் தரிக்கக்கடவன். ஊர்த்துவ புண்டரங் தரியாமல் செய்கிற சந்தியாவந்தன சிரார்த்த கருமங்கள் நிஷ்பலமாய் விடும். அந்தக் கருமங்கள் இராக்ஷசர்களாலே கிரகிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

నాసాది కేశాంత మూర్ధ్వపుండ్రం ।
విష్ణోఃస్థితస్య చరణ ద్వయాకృతిః ।
ఏకాంగులం పాదతరోరస్యమూలం తదుత్పన్నే ద్వే చశాఖే ।
తత్రైవచ మధ్యావకాశో ద్వ్యంగులా దన్యూనః ।

நாசி முதற்றெடங்கி கேசம்வரையில் ஊர்த்துவ புண்டரம், நிற்கிற விஷ்ணுவின் இரண்டு திருவடிகளைப்போலத் தரிக்கத்தக்கது. இந்தத் திருவடிகளாகிற விருக்ஷத்திற்கு வேர்போலே ஓரங்குலமாகவுந் தரிக்கத்தக்கது. அந்த வே

161442
Rm211.M87

ரில் நின்று முண்டாயிருக்கிற இரண்டு கிளைகள் போலவுமிருக்கத்தக்கது. அப்படியே மத்தியில் வெளியானது இரண் டங்குலத்தைக்காட்டிலும் குறையாமலிருக்கத்தக்கது.

సః శ్రీప్రతిష్ఠాయై శ్రీహరిద్రా యతో హరింద్రావయతి
విష్ణునా సహ ।
ఆదిత్యవర్ణే శ్రీఫలే ధారయేత్ ।
తజ్జలేన శ్రీబీజేన సంమృజ్య తత్సూక్ష్మరేఖాం ధారయేత్
స శ్రీమాన్ భవతి ।

அந்த வெளியை பிராட்டியின் பிரதிஷ்டையின்பொருட்டு விடவேண்டும். இலக்குமியின் சம்பந்தமான மஞ்சட் பொடியானது ஸ்ரீ ஹரியை ஆசைப்படும்படி செய்வதால், அது அரித்திரை யென்று சொல்லப்படுகிறது. அதனால் விஷ்ணுவின் திருவடிகளுடனே பிரதிஷ்டை பண்ணக்கடவன். அந்தப் பொடியைப் பாலசூரியனைப்போலிருக்கும் வில்வக் குடுக்கையில் தரிக்கக்கடவன். அப்பொடியை சுத்த ஜலத்தினாலே ஸ்ரீபீஜ மந்திரத்துடனே குழைக்கக்கடவன். அந்தத் திருமண் காப்புக்குஞ் சூட்சுமமான ரேகையாகத் தரிக்கக்கடவன். இப்படித் தரித்தவன் ஸ்ரீமானுகிறான்.

తద్వేశాఖే హంసవర్ణే । గాయత్రి త్రిష్టుప్ ఛందసే ।
ఆత్మపరమాత్మదైవత్యే। దర్శ పౌర్ణమాసీకేష్టాపూర్తిక్రియే॥
భుక్తిముక్తిఫలే। సా రేఖా శ్రీవర్ణా । గాయత్రీ ఛందః।
ఆనందక్రియామృతత్వఫలా। అయం పుండ్ర విధిః ।

அந்தக் கிளைபோலிருக்குந் திருவடிகள் அமிசவர்ணமாயுங் காயத்திரியின் பொருளாயும் திருஷ்டப்சந்தசாயும் இருக்கின்றன. ஆத்தும பரமாத்தும தேவதையை யுடையதாயும், தரிசஸ்தாலீபாகம்; பௌர்ணமாசிய ஸ்தாலீபாகம், இஷ்டி, வாபி கூபதடாக முதலிய பிரதிஷ்டை இவைகளினுடைய பலத்தைக் கொடுக்கத்தக்கதாயு மிருக்கின்றன. புத்தியையும், முத்தியையும் அளிக்கும். அந்த ஸ்ரீ சூரண ரேகையானது இலக்குமி வர்ணமாயும் காயத்திரி சந்தசாயுமிருக்கிறது. ஆனந்த கிரியையாயும் அமிர்தமென்கிற மோக்ஷ பலமாயுமிருக்கிறது. இது தான் ஊர்த்துவ புண்டர விதி.

ఏవంవిధిత్వా యో ధారయతి స వైదికో భవతి ।
స సర్వకర్మార్హో భవతి । కాయికా త్పాతకా
త్పూతో భవతి ।
స విష్ణుసాయుజ్యమవాప్నోతి। స విష్ణుసాయుజ్యమవాప్నోతి।
య ఏవం వేదేత్యుపనిషత్ ।

எவனொருவன் இந்தப் பிரகாரம் விதித்த பாதபுண்டரத்தைத் தரிக்கிறானோ அவன் வேத சம்பந்தமுடைய வைதீகனாகிறான், அவன் சருவ கருமங்களுக்கும் யோக்கியனாகிறான், காயகத்தாற்செய்த பாதகங்களும்போய்ப் பரிசுத்தனாகிறான், விஷ்ணு சாயுஜ்ஜியத்தை யடைகிறான், விஷ்ணு சாயுஜ்ஜியத்தை யடைகிறான் என்று வேத உபநிஷத்து.

ஸஹநாவவத்விதிஸாந்திஃ.

☞ குறிப்பு.—தற்காலத்திற் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிற நூற்றெட்டு உபநிஷத்துக் கோவையில், இந்தக் "காத்தியாயன உபநிஷத்து" கிடையாது. இதுபோலவே, ஊர்த்துவபுண்டர விதியைக்கூறும் "வராகோபநிஷத்து" மில்லை. ஆயினும், வராகோபநிஷத்து என வொன்று நூற்றெட்டு உபநிஷத்துக்கோவையிலுள்ளது. அதில் ஊர்த்துவ புண்டரவிதியைக்கூறும் பாகமானது கிடையாது; ஆனால் ஊர்த்துவபுண்டரத்தைக் கோபி சந்தனத்தால் தாரணம் பண்ணும்படி "வாசுதேவ உபநிஷத்து" மாத்திரம் கூறுகின்றது. ஒருக்கால் "ஜாபால உபநிஷத்து" சிலவிருப்பதுபோல வராகோபநிஷத்துஞ் சிலவிருக்கலாம்; அந்நூற்றெட்டில், "சுதர்சனோபநிஷத்து," "மகாசுதர்சனோபநிஷத்து" முதலிய உபநிஷத்துக்களுமில்லை. இவ்வண்ணம் அந்த நூற்றெட்டு உபநிஷத்துக்களில், மேற்கூறிய உபநிஷத்துக்களில்லாமையால் சிலர் கற்பனை யென்று சொல்லுவர். அப்படிச் சொல்லுவோர் அந்த நூற்றெட்டு உபநிஷத்துக்கோவையும் சரியானதென்று சொல்லமுன் வந்து யாதொரு பிரமாணமுங் காட்டத்துணியார். இவ்வுபநிஷத்துக்களின் கோவையைச் சித்தாந்தம் பண்ணியது நூற்றெட்டில் ஒன்றாக இப்போது அச்சில் வழங்கிவரும் "முக்திகோபநிஷத்து" ஒன்றே. இவ்வுபநிஷத்தைக்காட்டிலும் மற்றொன்றும் பலமான சாக்ஷியாகாது. ஆகையால், அதில், நூற்றெட்டு உபநிஷத்துக்களைத்தவிர அநேக உபநிஷத்துக்கள் உண்டென்று பலப்படுத்துகிறது. இக்காரணம் பற்றியே ஆயிரத்துக்குமேல் உபநிஷத்துக்கள் உண்டெனச் சிலர் கூறுவர். இவ்விவரங்கள் "முக்திகோபநிஷத்" தை யாம் பிரசுரிக்கிறபோது நன்கு விளங்கும். இனி காத்தியாயனம், வராகம், சுதரிசனம், மகா சுதரிசனம் முதலிய உபநிஷத்துக்கள் கற்பனையல்லவென்றும் இவை வேதார்த்தங்களை விரித்த உபநிஷத்துக்களில் ஒவ்வொன்றாகுமென்றும் உறுதி கூறுகின்றோம்.

ஸ்மிருதிஸாரப்பிரகாரணம்.

சாதிகளின் பிரிவு.

(௬௮-ம் பக்கத் தொடர்.)

பாகிய ஜாதிகள்.

సంకీర్ణ యోనయో యేతు ప్రతిలోమానులోమజాః ।
అన్యోన్య వ్యతిషక్తాశ్చ తాన్ ప్రవక్ష్యామ్య శేషతః ॥

பிரதிலோம சாதியானும், அனுலோம சாதியானுஞ் சம்பந்தஞ் செய்வதினுற் பிறந்தவர்களான பாகிய சாதிகளைக்குறித்து விஸ்தாரமாகச் சொல்லுகின்றேன்.

సూతో వైదేహకశ్చైవ చండాలశ్చ నరాధమః ।
మాగధః క్షత్తృ జాతిశ్చ తథాయోగవ ఏవచ ॥

சூதன், வைதேகன், மனிதர்களுக்குள்ளே அதமனுன சண்டாளன், மாகதன், க்ஷத்தன், ஆயோகவன்.

ఏతే షట్ సదృశాన్వర్ణాన్ జనయంతి స్వయోనిషు ।
మాతృ జాత్యాం ప్రసూయంతే ప్రవరాసుచ యోనిషు॥

இந்த அறுவர்களும் தஞ்சாதிப் பெண்களிடத்திலும், உத்தமசாதிப் பெண்களிடத்திலும், தமக்குச் சரியான சாதியுடைய மக்களைப் பிறக்கச்செய்கின்ருர்கள்.

యథా త్రయాణాం వర్ణానాం ద్వయోరాత్మాస్య జాయతే।
ఆనంతర్యాస్స్వయోన్యాంతు తథా బాహ్యేష్వపి క్రమాత్॥

பிராமணனுக்கு க்ஷத்திரிய வைசியப் பெண்களிடத்திற் பிறந்தவர்கள், எப்படி உபநயன முதலியவைகட்குரியவர்களாக விருப்பதினுல் உயர்ந்தவர்களா யிருக்கின்ருர்களோ, அப்படியே வைசியனுக்கு க்ஷத்திரியப் பெண்ணிடத்திலும், க்ஷத்திரியனுக்குபிராமணப்பெண்ணிடத்திலும் பிறந்த புத்திரர்கள், சூத்திரனுக்கு வைசிய க்ஷத்திரிய பிராமணசாதிப் பெண்களிடத்திற் பிறந்தவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர்களாவார்கள்.

తేచాపి బాహ్యాన్ సుబహూం స్తతోప్యధికదూషితాన్।
పరస్పరస్య దారేషు జనయంతి విగర్హితాన్ ॥

மேற்கூறிய ஆயோகவன் முதலான அறுவரும் ஒருவன் மனைவியிடத்தில் மற்றொருவன் சேர்ந்து, தம்மைக்காட்டிலும் நிந்தகரும், மரியாதை செய்பத்தகாதவர்களாயிருக்கும் அநேக பாகிய சாதிகளைப் பிறக்கச்செய்கின்ருர்கள்.

యథైవ శూద్రో బ్రాహ్మణ్యాం బాహ్యం జంతుం ప్రసూయతే।
తథా బాహ్యతరం బాహ్య శ్చాతుర్వర్ణ్యే ప్రసూయతే॥

சூத்திரன் பிராமணப்பெண்ணிடத்தில் எப்படி பாகிய சாதியான சண்டாளனை உற்பத்தி செய்கின்ருனே அப்படியே அந்த சண்டாளன் முதலான பாகிய சாதிகளும், நான்கு சாதிப் பெண்களிடத்திலும், தம்மைக்காட்டிலுங் குறைவாய் திண்டப்படாமற் றூரமாயிருக்கப்பட்ட பாகிய சாதிகளை உற்பத்திசெய்கின்ருர்கள்.

ప్రతికూలం వర్తమానా బాహ్యాబాహ్యతరాన్ పునః।
హీనాహీనాన్ ప్రసూయంతే వర్ణాన్ పంచ దశైవతు ॥

சூத்திரனுக்கு மேலான மூன்றுசாதிப் பெண்களிடத்திற் பிறந்த ஆயோகவன், க்ஷத்தன், சண்டாளன் என்னும் மூவர்களும் தந்தஞ் சாதிப் பெண்களிடத்திலும் நான்குசாதி மனைவிகளிடத்திலும், ஒவ்வொருவரும் ஐங்கைந்து சாதியாக மிகவும் பாகிய சாதிகளான பதினைந்து சாதிகளை உற்பத்திசெய்கின்ருர்கள்.

ప్రసాధనోపచారజ్ఞ మదాసం దా సజీవనమ్।
సైరింధ్రం వాగురా వృత్తిం సూతే దస్యు రయోగవే ॥

இனி சொல்லப்போகிற குறிப்பையுடைய தசியன், ஆயோகவ சாதிப் பெண்ணிடத்தில் எண்ணெய் தேய்த்தல், கைகாற் பிடித்தல், வலைவிசுதல் இவைகளாற் பிழைக்கும்படியான சைரிந்திரனை உற்பத்திசெய்கின்ருன்.

మైత్రేయకంతు వైదేహో మాధూకం సంప్రసూయతే।
నౄన్ ప్రశంసత్య జస్రంయో ఘంటాతాడోరుణోదయే ॥

வைசியனுக்கு பிராமணப் பெண்ணிடத்திற் பிறந்தவனுன வைதேகன், சூத்திரனுக்கு வைசியப்பெண்ணிடத்திற் பிறந்த ஆயோகவப் பெண்ணிடத்தில், மதுரமான வார்த்தைகளாடும் மைத்திரேயனை உற்பத்தி செய்கின்ருன். அவனுக்கு அதிகாலையில் மணியடிப்பதும், அனைவரையும் துதிசெய்து பிட்சையெடுத்து சிவனஞ் செய்வதுந் தொழிலாம். இவனையே குடும்பி யென்று சொல்லுகின்ருர்கள்.

నిషాదో మార్గవం సూతే దాసం నౌ కర్మజీవనమ్ ।
కైవర్త మితియం ప్రాహు రార్యావర్త నివాసినః ॥

பிராமணனுக்கு சூத்திர மனைவியினிடத்திற் பிறந்தவனுன நிஷாதன், ஆயோகவப் பெண்ணிடத்தில் படகு ஓட்டுஞ் சிவனமுடைய மார்க்கவனை உண்டாக்கின்ருன். அவனை ஆரியாவர்த்த தேசவாசிகள் கைவர்த்தன் (செம்படவன்) என்று அழைக்கின்ருர்கள்.

మృతవస్త్ర భృత్స్వనార్యాసు గర్హితాన్నాశనాసుచ।
భవంత్యాయోగవీష్వేతే జాతిహీనాః పృథక్ త్రయః ॥

ஈனசாதிகளிடத்திலே, மேலேசொல்லிய சைரிந்திரன், மைத்திரேயன், மார்க்கவன் இம்மூவரும் ஆயோகவப் பெண்ணிடத்திற் பிறந்தவர்களாயிருந்தும், பிதுரு பேதத்தினால் வெவ்வேறு தொழிலையுடையவர்களாயும், பிணத்தின்மேலுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர்களாயும், எச்சிலையுண்பவர்களாயு மிருக்கின்றார்கள்.

కారావరో నిషాదాత్తు చర్మకారః ప్రసూయతే ।
వైదేహ సైరంధ్రభేదౌ బహిర్గ్రామ ప్రతిశ్రయౌ ॥

நிஷாதனுக்கு வைதேகசாதிப் பெண்ணிடத்தில் தோல்வேலைசெய்யும் காராவரன் பிறக்கின்றான். வைதேகன், சைரிந்திரன் முதலான பேதமுடையவர்கள் ஊருக்குப்புறம்பே குடித்தனஞ் செய்யத்தகுந்தவர்கள்.

చండాలాత్పాండుసోపాక స్త్వక్సార వ్యవహారవాన్ ।
ఆహిండికో నిషాదేన వైదేహ్య మేవ జాయతే ॥

சண்டாளனுக்கு வைதேகப் பெண்ணிடத்தில் பாண்டுசோபாகன் பிறக்கின்றான், அவனுக்கு மூங்கில் வேலை செய்வது தொழில், நிஷாதனுக்கு வைதேகப் பெண்ணிடத்தில் ஆகிண்டிகன் பிறக்கின்றான், இவனுக்கு குற்றவாளிகளை அடித்தல், கட்டல், சிரச்சேதம்பண்ணல் இவைகளைச் செய்யுமிடத்திற் காவலிருப்பதே தொழிலாம்.

చండాలే నతు సోపాకో మూలవ్యసన వృత్తిమాన్ ।
పుల్కస్యాం జాయతే పాప స్సదాసజ్జన గర్హితః ॥

சண்டாளனுக்கு புற்கச சாதிப்பெண்ணிடத்திற் சோபாகன் பிறக்கின்றான், அவனுக்கு இராசாக்கினையின்படி குற்றவாளிகளைக் கொல்லுவதே தொழிலாகையால், எப்பொழுதும் அவன் பெரியோர்களால் நிந்திப்பவனாயும், மிகவும் பாபியாயுமிருக்கின்றான்.

నిషాదస్త్రీతు చండాలా త్పుత్ర మంత్యావసాయినం ।
శ్మశాన గోచరం సూతే బాహ్యానామపి గర్హితం ॥

சண்டாளனுக்கு நிஷாதசாதிப் பெண்ணிடத்தில் அந்தியாவசாயி என்பவன் பிறக்கின்றான், அவனுக்கு சண்டாளனுடைய தொழிலைக்காட்டிலும் ஈனமானசுடலையைக்காப்பதே தொழில்.

సంకరే జాతయ స్త్వేతాః పితృమాతృ ప్రదర్శితాః ।
ప్రచ్ఛన్నావా ప్రకాశావా వేదితవ్యాః స్వకర్మభిః ॥

தாய் தந்தைகள் விபசாரத்தினாற் பிறந்தவைகளான சங்கரசாதிகள் உற்பத்தியை விளக்கமாகச்சொன்னேன். இவர்கள் இரகசியமாக விபசாரஞ்செய்யப் பிறந்தாலும், பகிரங்கமாக விபசாரஞ்செய்யப் பிறந்தாலும் அவரவர்கள் தொழிலினாலே அறியப்படுகின்றார்கள்.

సజాతి జానంతరజాష్షట్ సుతాద్విజ ధర్మిణః ।
శూద్రాణాంతు సధర్మాణా స్సర్వేపధ్వంసజాః స్మృతాః ॥

பிராமணர்களுக்கு அனுலோமமாகப் பிறந்த அறுவர்களும், சுசாதிகளிடத்திற் பிறந்தவர்கள் போலே உபநயன முதலானதுகளைச் செய்யத்தகுந்தவர்கள். பிரதிலோமமாகப் பிறந்தவர்களெல்லாம் உபநயன முதலியவைகளுக்குத் தகுந்தவர்களல்ல.

తపోబీజ ప్రభావైస్తు తేగచ్ఛంతి యుగేయుగే ।
ఉత్కర్షం చాపకర్షంచ మనుష్యేష్విహ జన్మతః ॥

தஞ்சாதியிடத்திற் பிறந்தவர்களும், அனுலோம சாதியார்களும் தபசு, பீஜம் இவற்றினுடைய பிரபாவத்தினால் எல்லாயுகங்களிலும் உத்கிருஷ்டத்தை யடைகின்றார்கள், அந்தப் பிரபாவமில்லாமையால் நிக்ருஷ்ட மடைகின்றார்கள்.

శనకైస్తు క్రియాలోపాది మాః క్షత్రియ జాతయః ।
వృషలత్వం గతాలోకే బ్రాహ్మణా దర్శనేనచ ॥

பிராமணனைச் சேவிக்காமற்போவதினாலும், உபநயன முதலான கருமலோபத்தினாலும் மேலேசொல்லிய க்ஷத்திரிய சாதிகள், இந்த லோகத்தில் அவ்வக்காலங்களில் சூத்திரத்தன்மையையடைந்தார்கள்.

పౌండ్రకా శ్చౌడ్ర ద్రవిడాః కాంభోజా యవనాశ్శకాః ।
పారదాపహ్లవా శ్చీనాః కిరాతా దరదాః ఖశాః ॥

பௌண்டரகம், ஓட்டரம், திரவிடம், காம்போஜம், யவனம், சகம், பாரதம், அபக்கிலவம், சீனம், கிராதம், தரதம், கசம் என்னுந் தேசங்களை யடைந்தவர்களெல்லாம் மேலே சொல்லியபடி சூத்திரர்களானவர்கள்.

ముఖ బాహూరు పజ్జానాం యాలోకే జాతయో బహిః ।
మ్లేచ్ఛవాచ శ్చార్యవాచ స్సర్వేతే దస్యవః స్మృతాః ॥

உலகத்தில், நான்கு சாதிகளையுடையவர்களுக்கு சங்கர சாதிகளிடத்திற் பிறந்தவர்களுள்ளே சிலர் துருக்குபாஷையுடையவர்களாகவும், சிலர் சம்ஸ்கிருத முதலான உத்கிருஷ்ட பாஷைகளையுடையவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் தசியர் (திருடர்) என்னப்படுகின்றார்கள்.

యేద్విజానా మపశదా యేచాపధ్వంసజాః స్మృతాః ।
తేనిందితై ర్వర్తయే యుర్ద్విజానామేవ కర్మభిః ॥

அனுலோம பிரதிலோம சாதியாரெல்லாரும் பிராமணர்கள் முதலானோருக்கு உபகாரமான மேலையதொழில்களைச்செய்து சீவிக்கவேண்டும்.

ஆரியமதசித்தாந்தப் பிரகரணம்.

ஆரிய ஸ்திரீ புருஷர்களுக்குரிய ஊர்த்துவ புண்டர விதிகள்.

வேத சாஸ்திரங்களிலே ஊர்த்துவ புண்டரங்கள் நானுவிதமாகச் சொல்லப்பட்டன. அவை காமியார்த்தம், மோக்ஷார்த்தமென்று இருவகைப்படும். அவ்விதிகளை இங்கு விளக்குகிறோம்:—

மகோபநிஷத்து.

ధృతోర్ధ్వ పుణ్డ్రం పరమేశితారం నారాయణం
సాంఖ్యయోగాధిగమ్యం ।
జ్ఞాత్వావిముచ్యేత నరస్సమస్తై స్సంసారపాశై
రిహచైతివిష్ణుం ।

சாங்கியம், யோகம் இவைகளாலறியத்தக்க நாராயணனை ஊர்த்துவபுண்டரந் தரித்து ஒருவன் அறிவானுகில் அவன் சகல சமுசாரபாசங்களையு நீக்கி ஸ்ரீமந்நாராயணனை யடைவான்.

இப்படிப்பட்ட பிரமாணங்களினுதரவுகளைக் கண்டு, ஸ்மார்த்தர்கள் எவ்வித திரவியத்தினுலாவது ஊர்த்துவ புண்டரந்தரிப்பார்கள். திரியக் புண்டரந் தரிப்போரும் ஊர்த்துவபுண்டரத்தைக் கலந்து தரிப்பார்கள்.

கடசாகை.

ధృతోర్ధ్వ పుణ్డ్రః కృత చక్రధారీ విష్ణుం పరం
ధ్యాయతియో మహాత్మా ।
స్వరేణ మంత్రేణ సదాహృది స్థితం పరాత్పరం
యన్మహతో మహాంతం ।

எந்த மகாத்துமா சக்கரதாரியாய் ஊர்த்துவ புண்டரத்தைத் தரித்து, சுரத்தாலும் மந்திரத்தாலும் தனதுள்ளத்தில் தியானிக்கின்றனே, அவன் பராத்பரனுகிய விஷ்ணுவை யடைவான்.

இத்தகைய பிரமாணங்களை யறிந்த மாத்துவர்கள் தப்த சங்கசக்கரதாரிகளாய் ஊர்த்துவபுண்டரத்தைக் கோபி மண்ணினுற் றரித்துக்கொண்டுவருகிறார்கள்.

அதர்வணம்.

హరేః పాదాకృతి మాత్మనోహితాయ మధ్యేచ్ఛిద్రం ।
ఊర్ధ్వపుండ్రం యోధారయతి ।

ஆத்துமாக்கள் தம்முடைய இதத்துக்காக அரிபாதாக்கிருதியுடன் ஊர்த்துவபுண்டரமும் இடையில் சித்திரமுமாகத் தரிக்கவேண்டும்.

வராகோபநிஷத்.

శ్రీ చూర్ణం శ్రీ కరం దివ్యం శ్రీ యశ్చాంగం సముద్భవం ।
పుణ్డ్రద్వయస్య మధ్యేతు ధార్యం మోక్షార్థిభి స్మృతం ।

ஸ்ரீலக்ஷ்மியின் சூர்ணமாகிய மங்கலப் பொடியை இரண்டு திருவடிகளுடைய ஊர்த்துவபுண்டரத்தின் நடுவில் மோக்ஷத்தி லிச்சையுடையவர்கள் தரிக்கத்தக்கது.

இவ்வண்ணம் சகல வேதாந்தங்களிலும் நிச்சயிக்கப்பட்ட ஊர்த்துவபுண்டரவிதிகளை அனுசரித்து ஸ்ரீவைஷ்ணவர்கள் தரிக்கின்றார்கள்.

இந்த ஊர்த்துவபுண்டரங்களின் ஆகாரபேதங்கள் ஸ்ரீபாஞ்சராத்திர புராணுதி வசனங்களிற் பலவாறு கூறியிருக்கின்றன. அவைகளை ஸ்ரீவைஷ்ணவர்கள் இஷ்டகாமியத்தின்பொருட்டும் மோக்ஷத்தின்பொருட்டுந் தரித்துக்கொள்ளுவார்கள்.

பாரமேஷ்டி சம்மிதை.

శంఖాకారం తథైవచ ॥ మత్స్యాకృతిం తథా ప్రోక్తం ।
కూర్మాకారం తథైవచ ॥ ఏవంహి లక్షణం ప్రోక్తం ।

பதும புராணம்.

ఏవ పుణ్డ్రం విధిః ప్రోక్తస్సర్వేషాం గిరిజేమయా ।
అశ్వత్థ పత్ర సంకాశో వేణుపత్రా కృతిస్తథా ॥
పద్మ కుడ్మల సంకాశో మోహనం త్రితయం స్మృతం ।
మహా భాగవతాశ్శుద్ధాః పుణ్డ్రం హరి పాదాకృతిం ॥

இருசமயவிளக்கம்.

ஓதுமறை கரைகண்ட முநியேகே ளூர்த்துவ
புண்டரந்தான் சொல்லில்
தாதுசெறி பத்மாகாரங் கூர்மாகாரஞ்
சங்காகாரம்
தீதறு மச்சுவபத்திராகாரம் வேணுபத்திரந்
தீபாகாரம்
போதவருமால் சரணவாகாரந் திந்திருணி
புட்பாகாரம்.

என்று கூறிய பல ஆகாரங்களில் பத்மாக்கிருதியோடுகூடிய ஸ்ரீவிஷ்ணுவின் திருவடியாகாரமே மோக்ஷாபேக்ஷை யுடையவர்களுக்கு விதிக்கப்பட்டது.

ஸ்ரீபாஞ்சராத்திரம்.

అర్ధ చంద్రాకృతి స్త్రీణాం ధార్యం పుణ్డ్రం భృశోరథః ।
తన్మధ్యేదీపవద్ధార్యం శ్రీచూర్ణం శ్రీప్రదం శుభం ॥

ஸ்திரீகள் புருவத்தின்மேல் அர்த்த சந்திராக்கிருதியாக ஊர்த்துவ புண்டரத்தைத் தரித்து அதன் மத்தியில் தீபாகாரம்போல் சுபத்தின் பொருட்டு ஸ்ரீசூர்ணத்தைத் தரிக்கவேண்டும்.

ఊర్ధ్వపుండ్రం సధా స్త్రీణాం అర్ధచంద్రాకృతిర్భవేత్ ।
యావజ్జీవం విశేషేణ సమ్యక్సూర్యోదయా తథా ॥

ஸ்திரீகள் எப்பொழுதும் அர்த்தசந்திராக்கிருதியாக ஊர்த்துவபுண்டரந் தரித்துத் தங்கள் ஜீவகாலபரியந்தம் அநுஷ்டிக்கவேண்டும்.

இத்தகைய பிரமாணங்களை சிலர் ஆதாரமாகக்கொண்டு சந்திராக்கிருதி புண்டரத்தைத் தரிப்பார்கள். சிலர் கூர்மாக்கிருதி முதலிய ஆக்கிருதிகளோடொக்க சந்திராக்கிருதியையும் காமியார்த்திகள் தரிப்பதாயிருப்பதால் மோக்ஷார்த்திகள் தரிக்க வொண்ணாதென்று பத்மாக்கிருதியையே தரிப்பார்கள்.

ஸ்ரீபாஞ்சராத்திரம் இராகவசம்மிதை.

అర్ధచంద్రాకృతిం స్త్రీణాం కామ్యార్థమితి కథ్యతే ।
సరసీరుహ పుండ్రన్తు మోక్షార్థం నాత్రసంశయః ॥

காமியார்த்த ஸ்திரீகளுக்கு அர்த்தசந்திராகிருதியையும், மோக்ஷார்த்த ஸ்திரீகளுக்கு பதுமபுண்டரத்தையும் சொல்லப்பட்டது. இதிற் சமுசயமில்லை.

కామ్యహేతో శ్చంద్ర పీఠా ద్వరం మోక్షకరం శృణు।
ఇదం పద్మోపమం పుండ్రం అతీవ మమసమ్మతం ॥

காமிய ஹேதுவான சந்திராக்கிருதியைக்காட்டிலும், பதுமத்தோடுகூடிய புண்டரமானது மோக்ஷத்தைக் கொடுப்பதாயிருக்கின்றது. இதுவே எனக்குச் சம்மதமாயுள்ளது என்று பகவான் சொன்னார்.

ఇదం పద్మాకృతిం పుండ్రం శృణు పద్మజమేమతం ।
యదన్యపుండ్రం ధరతి సావధూ నిరయం ధ్రువం ॥

இந்த பத்மாக்கிருதி புண்டரமே எனக்கிஷ்டமென்றும், இதற்கு அந்நியமான புண்டரங்களைத் தரிப்பதால் நரகத்தை யடைவது நிச்சயமென்றும், பிரமனுக்குப் பகவான் சொன்னார்.

స్మార్త సంకరనారీణాం ధార్యం తిలక కుంకుమం ।
సర్వప్రపన్న నారీణాం పుండ్రం పద్మాకృతిం తథా ॥

ஸ்மார்த்த சங்கராதி ஸ்திரீகளுக்குத் திலககுங்குமங்களும், சகல வர்ணங்களிலுமுள்ள பிரபந்ந ஸ்திரீகளுக்கு கமலாக்கிருதி புண்டரமும் தரிக்கத்தக்கதென்று விதிக்கப்பட்டது.

కమలాకృతి పీఠంతు విప్రాణాం వైష్ణవస్త్రీయా ।
నాసాది మూలపర్యంతం ధార్యం భక్తి పురస్సరం ॥

கமலாக்கிருதி பீடத்தோடு விப்பிரர்களான வைஷ்ணவ ஸ்திரீகள் பக்திபூர்வகமாக நாசிகை தொடங்கி மூலபரியந்தம் தரிக்கத்தக்கது.

పద్మపీఠం వినాచూర్ణం ధరన్తి యదిపద్మజ ।
మమలక్ష్మ్యాశ్చ కోపస్య పాత్రం భవతిసా వధూః ॥

பிரம்மாவே! பதும பீடமில்லாமல் வெறும் ஸ்ரீசூர்ணத்தைமாத்திரந் தரித்த ஸ்திரீயானவள் எனக்குப் பிரியையாகிய ஸ்ரீ மகாலட்சுமியின் கோபத்திற்குப் பாத்திரமாகின்றாள்.

இந்த ஆகாரங்களோடுகூடிய ஊர்த்துவபுண்டரங்களில் ஒவ்வொன்றையுஞ் சிற்சில புருஷர்களும் ஸ்திரீகளும் தரிக்கின்றவர்களாயிருக்கின்றார்கள். "நாரீணாம் தைவதம் பர்த்தா" என்றபடி, பெண்களுக்குக் கணவனே தெய்வமென்பதால் கணவன் ஆசாரப்படியே மனைவியும் நடக்கவேண்டியவளா யிருக்கின்றாள். பதிவிரதையானவள் கணவனைத்தவிர வேறு புருஷனைக் கனவிலும் நினைக்கக்கூடாதவளாகையால், ஈஸ்வரனாயிருந்தாலும் அவளுக்குத் தியாஜ்ஜியமேயாம். ஆனதுபற்றி, ஸ்ரீவைஷ்ணவ ஸ்திரீகள் ஸ்ரீவிஷ்ணுவின் திருவடிகளைவிட்டு ஸ்ரீலக்ஷ்மீ நிவாசசொரூபமான கமலத்தையும், அரித்ரா சூர்ணத்தையுந் தரிக்கக்கடவர்கள். உலகத்தில் அநேக வைஷ்ணவர்களில் கணவன் பத்மாக்கிருதியும், மனைவி சந்திராக்கிருதியும் தரித்துவருகிறார்கள்; இது சாஸ்திரவிரோதம். ஆகையால், கணவன் சந்திராக்கிருதி தரித்தால் மனைவியும் சந்திராக்கிருதியும் தரிப்பதில் ஆக்ஷேபணையில்லை. அந்தந்த ஆக்கிருதிக்குத்தக்க பலன்களை அவரவர்கள் அடையத்தடையில்லை. இந்த உபாயத்தையறியாமல் மயக்குகொண்டு, கணவனொருவழி, மனைவி யொருவழி நடப்பது மகா பாதகமாம். இப்படி நடக்கும் ஸ்திரீ "பதிவிரதை" என்பதற்கு முற்றும் விரோதமாயிருப்பாள், அவ்விரோதத்தால் வரும் தண்டனையை நரகத்திலே யடைவாள். கணவனே யில்லாதவளும், பிரபன்னையானவளும், கணவனை யிழந்தவளும், "பதிரேவ குருஸ்திரீணாம் சர்வேஷா மீஸ்வரோ குருః" என்றபடி, பிரபஞ்சத்தில், ஈஸ்வரனே குருவாகக்கொள்ளவேண்டி யிருத்தலால், அப்படிப்பட்ட பிரபன்ன ஸ்திரீ ஸ்ரீவிஷ்ணுவின் திருவடியோடு திருமண் தரிக்கவேண்டியது திண்ணமென்க. இதை ஆசாரத்திலுங் காணலாமாக. இவர்களுக்கு "மாதா பிதா பிராதா நிவாஸஸ்ஸரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயணః" என்று சுருதியில், ஸ்ரீமந்நாராயணனே மாதா, பிதா, பிராதா, இருப்பிடம், இரக்ஷகன், சிநேகிதன், மோக்ஷத்துக்குபாயன் எனப் புகழப்பட்டிருப்பதையும், அந்வயித்துக்கொள்க.

ஓர் வைணவன்.

ஆரியமததூஷண பரிகாரப் பிரகரணம்.

ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தம தர்மமும், (ஓர் பிரசங்க பங்கமும்.)

(௪௨-ம் பக்கத் தொடர்.)

II.—இடம்.

சர்மா, "பிரமனை மண்ணுக்கு அதிதேவதையென்றும், விஷ்ணுவை அப்புவிலுறைபவரென்றும், ருத்திரனை தீக்கடவுளென்றும்," முன்னங்கூறி, பின்பு........."மண் நீரில் கரையவருங்காலத்தில், அதின் அதிஷ்டான தேவனாகிய பிரமன் விண்டுவில் ஒடுங்குவதும், நீர் தீயில் வற்றுங்காலத்தில் விஷ்ணுமூர்த்தி ஸ்ரீருத்திரனிடத்து ஒடுங்குவதும் உண்மை. இந்த ருத்திரமூர்த்தி மஹேஸ்வரனிலும், மஹேசுவரன் சதாசிவமூர்த்தியிலும், அவர் பிந்துவிலும், பிந்துநாதத்திலும், நாதம் சத்தியிலும், சத்தி சிவத்திலும் ஒடுங்கும் என்பதும் உண்மை" என்றும் சிருஷ்டிலயங்களைக் கூறினர். இவற்றால்,

பிரமன்—மண்.	பிந்து—0
விண்டு—நீர்.	நாதம்—0
ருத்திரன்—அக்கினி.	சத்தி—0
மஹேஸ்வரன்—வாயு.	சிவம்—0
ஸதாசிவன்—ஆகாயம்.	

என்று ஒவ்வொரு வஸ்துக்களுக்கு அதிதேவதையாகவோ, ஒன்றுக்கொன்று பெரிய வஸ்துவாகவோகொண்டு சர்மா பிரசங்கஞ்செய்தனர். இவைகளுக்குத் திருஷ்டாந்தமாக,

"ஆகாயத்தில் வாயு பிறந்ததென்றும்,
வாயுவில் அக்கினி தோன்றியதென்றும்,
அக்கினியில் ஜலம் ஜனித்ததென்றும்,
ஜலத்தில் மண் உண்டாயதென்றும்,
இப்படித்தான் விரி வென்றும்,
மண் நீரில் ஒடுங்கு மென்றும்,
நீர் தீயில் சுவறுமென்றும்,
தீ காற்றில் அபாவப்படுமென்றும்,
காற்று ஆகாயத்தில் மறையுமென்றும்,

இதுவே ஒடுக்கமென்றும், தத்துவ சாஸ்திரங்களுடையவும், உபநிடதங்களுடையவும் துணிபு" என்று பிரகிருதி தத்துவங்களைக்காட்டினர்.

இன்னுஞ் சர்மா, "மேலே சொல்லிய உண்மையை அறிய சக்தியிருந்தாலும் இல்லாமற் போனாலும் ஜலதேவதை தீக்கடவுளில் ஒடுங்கும் என்பதை அறிவிலியும் ஸம்மதிக்கவேண்டுமாதலால், விஷ்ணுமூர்த்தி ஸர்வோத்தமன் அல்லவென்றும், அவர்க்குமேல் ருத்திரன் என்பது நிச்சயிக்கப்பட்டு, ருத்திரனுக்கு எவ்வளவோ படிக்கு மேலாகிய ஸ்ரீ சிவனே எல்லாவரிலும் யாவற்றுக்கும் மேலென்பது தீர்மானிக்கப்படுகின்றது" என்று இடமகிமையைப் பிரகாசப்படுத்தி முடித்தார்.

சர்மா, இவ்வண்ணம் தருக்கித்து முடிவுசெய்த பிரசங்கத்தில் தேறிய முடிவு என்னே? விஷ்ணு ஜலத்தில் வசிப்பவர் அல்லது ஜலத்திற்கு அதிதேவதை என்றனரே? இப்படியே ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு அதிதேவதை என்றேற்பட்டுவிட்டது. மண், நீர், தீ, இவைகளுக்குப், பிரமன், விண்டு, ருத்திரன் அதிதேவதை அல்லது அதனதன் சொரூபம் அல்லது அவ்வவற்றில் வசிப்பவர் என்றுகொண்டு, அவைகளின் முறையே தோற்றமும் ஒடுக்கமுமென்று பிரசங்கித்துவிட்டால், காற்று, ஆகாயம் இவ்விரண்டுக்கும் தேவதை யார்? மகேசுவரனும், சதாசிவனுமா? பிந்து, நாதம், சத்தி, சிவம் இவைகட்கு இடம் எது? (0) சுன்னமா? சர்மா தத்துவப்படி ஒவ்வொரு தேவதைக்கும் இடம் கற்பிக்க முடியாவிடில், மண், நீர், தீ, இவற்றிற்குமாத்திரம் பிரமன், விஷ்ணு, ருத்திரன் இவர்களைக் கற்பித்து ஏற்றத்தாழ்ச்சிக் கூறுவானேன்? அதிலும் திரிமூர்த்தி ருத்திரனைத் தாழ்ந்த படியில் கழிப்பானேன்? இவ்வாறு கூறுவதற்கு சைவ சாஸ்திரம் இடங்கொடுக்கின்றதா? எப்படி கொடுக்கின்றது? இவரிஷ்டப்படியா? வேறுவிதமாகவா?

கூர்ம புராணம்.

இரசதத்தின் குணமெய்தி நான்முகனாகி யுலகீன்றும், பரவுற்ற சாத்துவிதப் பண்பின் மாலாயழிக்கு, முறைபெற்ற தமோகுணத்தா லுருத்திரனாய்த் துடைத்தருளு, மருவுற்றும் விச்சையினின் மருவுவான் மகேச்சுரனே.

கந்த புராணம்.

நாரணனென்னுந் தேவு நான்முகத்தவனு முக்கட், பூரணன்றானுமாகிப் புவி படைத்தளித்துமாற்றி, ஆரணமுடிவுந் தேரா வனாதியா யுயிர்கட்கெல்லாங், காரணனாய மேலோன் கழலிணைக் கருத்துள் வைப்பாம்.

தேவிகாலோத்தரம்.

வாயுவென மறுகுகின்ற மனமடங்கும் வகை நடுப்பான், ஆயவவ னரி பிரம னிந்திரன் சண்முகன் குருவும், ஏயபல தேவதைகள் யோகித போதன னறிஞன், ஆயினெல்லா முடையானு மவனணங்கு நுண்ங்கிடையாய்.

சிவதருமோத்திரம்.

அண்டங்க ளனைத்துமாக்கு மலர்மிசை யயனே போற்றி, யண்டங்க ளனைத்துங் காக்கு மரியெனு மதிப போற்றி, யண்டங்க ளனைத்து மாற்று மதிபலவரனே போற்றி, யண்டத்தின் பேதத்தப்பா லனுதியே யமல போற்றி.

இப்படிப் பல சைவ சாத்திரங்கள், பிரமன், விண்டு, உருத்திரன் மூவரும் மற்றுந் தேவரும் சிவமே யென்று கூறிற்றேயல்லாமல், மாறுபடக்கூறினதில்லை. இங்ஙனமிருக்க, மண், நீர், தீ, காற்று இம்மூன்று இடத்தையும் அல்லது அதிதேவதா பத்தியத்தையும் அடைந்தார்களென்று அறைவது எந்த மோக்ஷ சாஸ்திரக்கூற்றோ? அறிகிலம். ஒருக்கால் அப்படி இடங்களை வகுத்து எந்த சாஸ்திரஞ் சொல்லினும் அது குணவர்ணனையாகக் காட்டுங் கற்பனையேயாகுமல்லது ஸ்திரமாக இடத்தையுடையவர்களென்று சொல்லக்கூடாதென்க. இவ்விஷயமாக யாம் இதுகாறும் சர்மா அபிப்பிராயத்தைக்கொண்டு தருக்கித்து அவர் காட்டிய ஆதாரவுகளை அனுதரவாக்கினேம். இனி வேதவேதாந்தாதி சாஸ்திரங்களில் எம்பெருமானுக்குள்ள இருப்பிட முதலியவைகளை விளக்குவோமாக.

சர்மா காட்டியபடியே, ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திலும், சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரமென்னும் முத்தொழிலே நடத்த பிரமன், விண்டு, உருத்திரன் என்னும் மூவரும் ஒன்றிலொன்று ஒடுங்கி வருவதுபோலவே, கூறப்பட்டது. ஆனால் சைவத்தில், சிவமே மேலென்றும், வைஷ்ணவத்தில், விஷ்ணுவே மேலென்றும் கொள்ளுவதேயன்றி வேறில்லை. இம்மூன்று தொழிலுடையாரும் மாறுதலடையும் சொரூபமுடையவரென்றும், இம்மூவருக்கும் நான்காவது வஸ்துவாகிய நாராயணன், விஷ்ணு, சிவம், வாசுதேவன், அச்சுதன் என்னும் பொருள் ஒன்றே கடந்தவஸ்து வென்றும், அதுவே இம்மூன்று மூர்த்திருபமாக மாறுதலடையுமென்றும், சாஸ்திரங்களில் உண்மையாகச்சொல்லப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால், சைவர்கள் குணருத்திரன், துரியருத்திரன் என்று கூறுவார்கள். வைஷ்ணவர்கள் காரண விஷ்ணு, காரிய விஷ்ணு என்று கூறுவர். ஆகையாலே காரண வைகுண்டம், காரிய வைகுண்ட வாசிகளாகிய விஷ்ணுக்களிருவராவர். காரியவைகுண்டம் சத்தியலோகங்களில் ஒன்று. காரண வைகுண்டம் அப்பிராகிருதமாய் நித்தியமாய் அழிவற்றதாயிருக்கும். அவ்விடம் பிரகிருதி குணவர்ஜிதங்களாயிருக்கும். அந்த இடம் சிருஷ்டிக்கப்படுவதில்லை, அழிக்கப்படுவதில்லை. அதுதான் மோக்ஷஸ்தானம். காரண விஷ்ணுவின் கருணையாலேயே தோற்றமும் மொடுக்கமுமாகும். அவர் ஒருவரே படைத்தல், காத்தல், தொழிற்குரிய முக்குணங்களுக்கு அதீதமானவராயிருந்தும், ஆன்மாக்களுஜ்ஜீவிக்கும்பொருட்டு,

பாரமேஸ்வரம்.

సృష్టి స్థిత్యంత కరణీం బ్రహ్మ విష్ణు శివాత్మికాం ।
స సంజ్ఞాం యాతి భగవాన్ ఏక ఏవ జనార్దనః ॥

படைத்தற் றொழிற்குரிய (இராஜச குணத்தோடு) பிரமாவாகவும், காத்தற் றொழிற்குரிய (சத்துவ குணத்தோடு) விஷ்ணுவாகவும், அழித்தற்றொழிற்குரிய (தாமத குணத்தோடு) உருத்திரனாகவும் பகவானாகிய ஜனார்த்தனன் ஒருவரே அடைகின்றார்.

விஷ்ணு புராணம்.

స్థలే విష్ణు జలే విష్ణుః విష్ణు స్థావర జంగమాః ।
అంతరిక్షే విష్ణు ర్బహిర్విష్ణు సర్వం విష్ణు మయం జగత్ ॥

என்கிறபடி, விஷ்ணுவுக்கு இருப்பிடம், மண், ஜலம் முதலிய தாவரசங்கமங்களிலும், அவ்வவ் வஸ்துக்களுள்ளும் புறம்பும், மற்றும் எல்லா விடங்களிலும் வியாபித்து, அவன் மயமாகவே ஜகத்து விளங்குகின்றமையால் நீரில்மாத்திரம் உறைபவனென்று கூறுவது அசங்கதமேயாம்.

தைத்திரியோபநிஷத்து.

అమ్భస్య పారే భువనస్య మధ్యే
నాకస్య పృష్ఠే మహతో మహీయాన్ ।
శుక్రేణ జ్యోతీంషి సమనుప్రవిష్టః
ప్రజాపతిశ్చరతి గర్భే అంతః ॥
యస్మిన్నిదం సంచ విచైతి సర్వం
యస్మిన్దేవా అధివిశ్వేనిషేదుః ।
తదేవ భూతం తదు భవ్య మా ఇదం
తదక్షరే పరమే వ్యోమన్ ॥

என்றபடி, விரிவான ஆகாசத்தைக்காட்டிலும் விரிந்திருக்கிற நாராயணன், மிகவும் பரப்புடைய திருப்பாற் கடலிலும், பதினான்கு புவனங்களின் மத்தியிலுள்ள சூரியமண்டலத்திலும், அழிவில்லாத பரமபதத்தின்மேலும் இருக்கின்றான். சருவலோக நாதனான ஸ்ரீமந்நாராயணன் தம்முடைய தேசசினாலே சூரிய சந்திராக்கினிகளை அதிஷ்டித்து, எல்லாப் பிராணிகளின் கர்ப்பத்தில் அந்தரியாமியாய்ச் சஞ்சரிக்கின்றான். எவனிடத்திற் சகல பிரபஞ்சமும் ஊழிக்காலத்திற் பெயரும் உருவமும் அழிந்து லீனமாகின்றதோ, சிருஷ்டியில் நாமரூபங்களைப் பெற்று வெவ்வேறாகின்றதோ, எந்த பிரம்மசொரூபனிடத்திற் பிரம்ம ருத்திராதிகளான தேவர்கள் அடங்கியிருக்கின்றார்களோ, அந்த நாராயண பிரம்ம சொரூபனே நிகழ்ந்த பொருள், நிகழும் பொருள், நிகழ்கின்ற இப்பொருளில் நிறைந்தவன். அவனே வியப்புறத்தக்கவன். அந்த பிரம்ம சொரூபனே அழிவற்றும் சிறந்துமுள்ள ஸ்ரீவைகுந்தத்திலே எழுந்தருளியிருக்கின்றான்.

இவ்வண்ணம் அநேக சுருதிகள் படிக்கின்றன. ஆகையால் சர்மா விஷ்ணுவுக்கு ஓரிடத்தைக் கற்பித்து, அவனுக்கும் பெரிய பொருளொன்றுண்டென்று கூறுவது வேதபாகியத் தன்மையாகும். இப்படி ஈண்டு சுருக்கி வியவகரித்த விஷயங்களால், விஷ்ணுவே எல்லா விடங்களிலுஞ் சஞ்சரித்து, அவ்வவ்விடத்தை பிரம்ம ருத்திராதிகளுக்கு கிருபையால் அடையச் செய்கின்றவனென்றும் விளங்கலால், ஸ்ரீவிஷ்ணுவே சர்வோத்தமனென்று தீர்மானிக்கப்பட்டது.

III.—தொழில்.

மேலே வியவகரித்த இடமகிமையில், இத்தொழில் விஷயங்களுக்கும் சந்தர்ப்பாநுசாரம் விளக்கியே யிருக்கின்றோம். ஆயினும், சர்மா "வேண்டுவ படைத்தான் பிரமன், அதை விதிப்படி புரந்தான் விண்டு, இவ்விருவருங் காணவே அவற்றை யழித்தான் உருத்திர நாதனெனில், தொழில்களில்மேலானது அழித்தல் என்பதும், மூர்த்திகளில் முதல்வர் உருத்திரர் என்பதும் நிச்சயம்" என்றும், "அழிக்கும் விதமே படைப்பு அதாவது அழித்தலில்லாதவழி படைப்பில்லை. படைத்தபிறகே காப்பாகையால் படைப்பில்லாதவழி காப்பில்லை. எனவே படைப்பு, காப்பு இரண்டும் அழித்தலில் வழியில்லை. அதாவது அழித்தலிற் றலைவனாகிய ருத்திரனுடைய செயலுக்குள் பிரமன் தொழிலும் விண்டுதொழிலும் அடங்குகின்றன" என்றும், "பிரமனுக்கு ருத்திரமூர்த்தியால் தலைபோனதென்றும், விஷ்ணுமூர்த்தி தூங்குகிறாரென்றும் உண்மை நூல்கள் கூறுவது. ஆதலால் தொழில்களில் மேலிட்டது ஸம்ஹாரம், மூர்த்திகளில் மேலிட்டவர் ஸ்ரீ உருத்திரநாதன்" என்றும், சர்மா, துணிந்து தருக்கித்துச் செருக்கி, அவைகட்கு முற்றுமாறாக, "படைத்தலும், காத்தலும், அழித்தலும் மாயாகாரியமாகிய தேகாதி விஷயங்களிற் செல்லுமேயொழிய, ஆன்மாவிஷயத்திற் பயன்படா. ஆகவே இம்மூன்று மூர்த்திகளும் தெய்வமல்லவாகில் இவரின் மேற்பட்டவராக உண்மை நூல்களால் சொல்லப்படும் "மூவர்கோனாய் நின்ற முதல்வன்" ஒருவனே ஸர்வோத்தமனென்று துணியப்படுகிறது எனவே விஷ்ணுமூர்த்தி ஸர்வோத்தமனல்லர்" என்று, முதற்கூறிய கக்ஷிகளெல்லாம் மூலதோஹானியாக்கி நான்காவது வஸ்துவைத்தேடிவிட்டார். ஆகையால் படைத்தலும், காத்தலும், அழித்தலும் ஆகிய மூன்றிலும் ஒன்றும் தலைமையாய் நிற்காமற் போய்விட்டது. இம்மூன்றையும் படைத்து நடத்தும் நாராயணனொருவனே யிருக்கிறானென்று—

சுருதி,

నారాయణాద్బ్రహ్మాజాయతే । నారాయణాద్రుద్రో
జాయతే ।

"ఏకోహవై నారాయణ ఆసీన్నబ్రహ్మా నేశానః"
"ఏకోహవై నారాయణ ఆసీన్నబ్రహ్మా నచ శంకరః"

என்றுகூறிற்று. அநேக விடங்களில் நாராயணனிடத்தில், பிரமாவும் சங்கரனும் பிறந்ததாகக் கோஷிக்கின்றேயன்றி, சிவனிடத்தில், நாராயணன் பிரமன் பிறந்ததாகச் சொல்லவில்லை. ஆகையால் சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரஞ்செய்து முடிவிலிருப்பவன் நாராயணனே தவிர வேறொரு தேவனுமில்லை. பிரமன், விஷ்ணு உருத்திரன் என்று மூன்று மூர்த்தியாக அவனேயாகி, அவர்களில் அதிஷ்டித்தவனாகி எல்லாத்தொழில்களையும் செய்கிறவன் அவனேயாகின்றான் என்பது அந்தரார்த்தம். இவ்வர்த்தத்தைப் புராணாதிகளிலும்,

காருடம்.

సఏవసృజ్యస్సచ సర్గకర్తా సఏవపాత్యత్తిచ పాల్యతేచ ।
బ్రహ్మాద్యవస్థాభిరశేషమూర్తిర్విష్ణుర్వరిష్ఠో వరదో
వరేణ్యః ॥

விஷ்ணு ஒப்புயர்வற்றவரும், வேண்டுவன அளிப்பவரும், எவருந் தஞ்சமாயடையத்தக்க

வரும் ஆகிய அவரே சகல லோகங்களையும் சரீரமாகவுடையவராதலின், படைக்கத்தக்க லோகஸ்வரூபியாகின்றனர். அவரே பிரமா, விஷ்ணு, ருத்திரன் என்கிற பேதங்களாலே யாவரையும்படைக்கின்றனர். அவரே நேராக காக்கின்றனர், அழிக்கின்றனர், பாதுகாக்கவும் படுகின்றனர்.

ఏక ఏవ జగత్స్వామి శక్తిమానచ్యుతః ప్రభుః ।
తదంశాశ్శక్తి మన్తోన్య బ్రహ్మేశానాదయోమరాః ॥

பிரபுவான அழிவற்ற நாராயணன், ஒருவரே உலகங்களையுடையவன், சகலசத்தியுடையவன். மற்றுள்ள பிரமனும் சிவனும் தேவர்கள் முதலானவர்களும், அந்த ஸ்ரீமந்நாராயணனுடைய அம்சத்தை யடைந்து திறமையுடையவர்களாயிருக்கின்றார்கள்.

பிரம்மாண்டம்.

లీనేషు సర్వ భావేషు యఏకోనవిలీయతే ।
కల్పాదౌచ సిసృక్షుర్యః సృజతే బ్రహ్మరూపధృత్ ॥
కల్పాన్తేరుద్ర రూపీచ గ్రసతే సకలఞ్జగత్ ।
తమాద్యం పురుషం విష్ణుం ప్రణతోస్మి జనార్ధనమ్ ॥

சகல வஸ்துக்களும் அழியினும் எவர் அழிகின்றிலரோ, படைக்குங்காலையில் எவர் சங்கற்பமுடையவராய், பிரமனுடைய ரூபத்தைத்தரித்து உலகங்களைப் படைக்கின்றனரோ, ஊழிக்காலத்தில் ருத்திரனுடைய ரூபத்தைத் தரித்து சகல உலகங்களை அழிக்கின்றனரோ, அந்த ஆதியானவரும் சருவேந்தரியாமியானவரும், ஸர்வவியாபி என்னும் விஷ்ணுவானவரும் ஆகிய ஸ்ரீமந்நாராயணனை சரண்புகுந்தவனாகின்றேன்.

பகவற்கீதை.

ఏతద్యోనీని భూతాని సర్వాణీత్యుపధారయ ।
అహం కృత్స్నస్య జగతః ప్రభవః ప్రళయస్తథా ॥

சேதனுசேதமான சகல பூதங்களையும் பிராகிருதம் அப்பிராகிருதம் என்கிற இரண்டு பிரகிருதியாலே யுண்டானவைளாக அறி. அந்த ஆதாரங்களாலே சகல சகத்தையும் படைக்கின்றவனும், அழிக்கின்றவனும் நானே.

திருமழிசை யாழ்வார்.

தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண்
தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற
தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவுந்
திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மை நின்க
ணின்றதே.

நம்மாழ்வார்.

புணர்க்குமயனு மழிக்குமரனும்
புணர்த்ததன்னுந்தி யோடாகத்து மன்னிப்
புணர்த்த திருவாகித் தன்மார்விற் றான்சேர்
புணர்ப்பன் பெரும்புணர்ப் பெங்கும்புலனே.

இப்படி முத்தொழிலையுஞ் செய்யும் நாராயணனைக் காப்புத் தொழிற்குரியவனென்பது ஏகதேசமேயன்றி, அவன் சொரூபத்தொழிலன்று. ருத்திரன் அழித்தல் செய்யினும், அழிந்த வஸ்துக்களையுங் காப்பாற்றவேண்டி யிருத்தலால், காப்பவன் அவசியம் வேண்டியிருக்கிறது. அம்போது விஷ்ணு அழிந்தானென்பது சர்வாபத்தமென்க. அவன் காக்காவிடில், படைப்புத்தொழிற்செய்ய பிரமனுக்கு ஓர் திரவியமும் இல்லாமற்போகும். போகவே அழித்தற்கு ஓர் பொருளுங் கிட்டாமற்போகும். அக்காலத்தில் ருத்திரனுக்கு அழித்தற்கு வேலையில்லாமல் ஊர்பேரில்லாமற் போகவேண்டிவருகிறது. ஆகையால் சர்மா வினை குயுக்திப் பிரசங்கஞ் செய்தது அவலமாயினதென்க. இவைகளை நன்றாய் யோசிக்காமல், "பிரமனுக்குத் தலைபோனதென்றதால்," சிவன் பிரம்மஹத்தியால் பிச்சை யெடுத்தானென்றும், "மண்டையேந்திதிரிதந் துண்ணும்முண்டியான் சாபந்தீர்த்தவொருதனிமுதல்வன்" காத்தானென்றும், சிலகதைகளையும் பரப்ப இடந்தந்தார். இனி, அப்படிக் காக்கவந்த மோஹன விஷ்ணுவைக் கண்டு எம்பெருமானென் றுணராமல், அவ்வாறான பெண்ணுருவைக்கண்டு மயங்கி வீரியம்விட்டானென்றும், சில தாமத புராணவநுஷ்டானக் கதைகளையும் விரிப்பார்போலும்.

அன்றியும் "விஷ்ணுமூர்த்தி தூங்குகிறாரென்றதால்," இவர் தூங்குகிறகாலத்தில், "ஸ்ரீஉருத்திரநாதன்" ஸம்ஹாரம் செய்து "மூர்த்திகளில் மேலிட்டவர்" ஆனாரென்றும், இப்படியானவர், தூங்கிக்கொண்டிருக்கும் விஷ்ணுவின்காலில் போய்விழுந்து எங்களைக் காப்பாற்றவேண்டுமென்று தேவர்களுடன் வணங்கினரென்றும், அதினால் அவர் எழுந்து காப்பாற்றினரென்றும் சாத்துவிக புராணக் கதைகளையும் விளக்குவார்போலும். இப்படி நாமுங் கூறுவது வேதவித்துக்களுக்கு சிரிப்பாயிருக்குமாகையால், இவற்றை விடுத்து மற்ற விஷயங்களை நாடுவோமாக.

(இன்னும் வரும்.)

தி. பரவஸ்து சேஷாத்திரி அய்யங்கார்,
பல்லாரி.

பொதுப்பிரசுரணம்.

பக்தியே முக்திவழி.

(சுகஜீவனி.)

ஸ்ரீமத் இராமதாஸ்.

ஜீவநதிகளி லொன்றாகிய கோதாவரி நதிக்கருகாமையில் 'ஜாம்ப்' என்னும் கிராமத்தில் வசித்துவந்த குடிகளிலோர் உயர் குடும்பத்தில், 1608 ஹில் ஓர் புத்திரர் பிறந்தனர். அவர் குடும்பத்தார் துதிக்கும் இராமரென்னும் நாமதேயத்தையே அப்பிள்ளைக்கிடப்பட்டது. அவர் பால்லியதிசைமுதல், அவருடைய நடக்கைகளெல்லாம் துறவறச் சம்பந்தமாகவே யிருந்தன. அவர் ஜாதியின் ஆசாரப்படி பூணூல் கலியாணம் நடந்தேறியபின், அவருக்கு விவாகஞ்செய்ய வேற்பாடாயிற்று. அவர் நற்குணங்களுக்குத் தக்கபடி ஓர் சிறுமியை விவாகம் புரியப்பட்டது. விவாகம் நடந்த தினத்தில் ஸ்ரீமத் இராமதாஸை கலியாணப் பெண்ணுக்குமுன் நிறுத்தி, அவரால் மாங்கல்லியம் தரிக்கும் சமயத்தில் புரோகிதரால் விவாகச் சடங்குகளுக்குத்தக்க மந்திரங்க ளுச்சரிக்கப்பட்டு, முடிவில் 'சாவதானம்' என்று சொல்லிய வார்த்தையைக்கேட்ட இராமதாஸ், உடனே அந்தப் புரோகிதரைப்பார்த்து ஓ ஸ்வாமி! 'சாவதானம்' என்று புகன்றீரே, அதின் கருத்தென்னவென்று வினவினர். அதற்கு புரோகிதர், துக்கமும் துன்பமும் நிறைந்த இல்லற தருமம் சிராய் நிறைவேற பகவானைப் பிரார்த்தித்தேன். மேலும் இந்த இல்லறத்தால் துறவறம் சாவதானமென்றனர். இதைக்கேட்ட தக்ஷணம் இராமதாஸருடைய இருதயத்தில் விசேஷ பயங்கர முண்டாய், கலியாணப் பந்தலை விட்டு ஆரண்ணியத்திற்கு ஓட்டம் பிடித்தார். அவருடைய பெற்றோர்களும், மற்றோர்களும் அவரை இல்லறத்திற்கு வரும்படி வேண்டிக்கொண்டனர்கள், அதற்கவர் இசையவேயில்லை. அம்மஹாத்மா ஆரண்ணியத்தில் ஆத்ம சுகிபாய் பக்தியோகத்தை யபிவிர்த்தி செய்துக்கொண்டு, தனக்கிஷ்டமுள்ளபோது, ஊருக்குள் நுழைந்து, தன்னிடமிருந்த திருவோட்டில் போதுமான ஆகாரத்தைப் பெற்று புசித்துவந்தார். அப்போது உண்மைக்குரிய ஹரிபக்தியையடைவதற்கு 205 சுலோகங்களை இயற்றினர். இச்சுலோகங்கள் வியர்த்தமாய் அலையும் மனதை நிலைக்கச்செய்து பிரம்மானந்தத்தை யுண்டாக்குகின்றது. அப்பேர்க்கொத்த திவ்விய சுலோகங்களானது எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவாயிருந்து ஆத்மசுகத்தை ஜீவிக்கச்செய்கிறமையால் அவைகள் யாவராலும் கொண்டாடப்பட்டுவருகின்றன. அந்த ஸ்ரீமத் இராமதாஸ் அவர்கள் இந்தியா தேசமுழுமையும் யாத்திரைசெய்தார். அவர் நற்கருத்துகள் நாஸிக், ஜெகாதம், ஷாஹபூர் முதலிய ஊர்களில் பரவியது. அவருக்கநேக சிஷியர்களுண்டு. இம்மஹானுடைய உயர் கருத்தைக் கேள்வியுற்ற மஹாராஷ்டர தேசவாசராகிய சிவாஜி மஹாராஜாவும் அவருக்குச் சிஷியராயினர். அந்த இராஜா, தன்னரசாக்ஷியைக் குருதட்சணையாகச் சமர்ப்பிக்க, அதைஅங்கீகரித்தவராய், பிறகுஅந்த இராஜாவின்ஒழுக்கத்தை மெச்சி, அவருக்கே அந்த அரசாக்ஷியைக்கொடுத்துவிட்டனர். அதற்கறி குறியாகவே அவ்வரசாக்ஷியில் காவி வஸ்திரங்கட்டிய துவஜத்தை ஸ்தாபிக்கப்பட்டது. இராமதாஸ் மஹாத்மாவால் அநேக திவ்விய கிரந்தங்க ளியற்றியவைகளில் 'தாஸ்போத்' அதாவது தாசர்களுக்குபதேசம் என்னும் கிரந்தத்தை அரங்கேற்றினர். அவர் தனது 73-வது வயதுக்குச் சரியான 1681 ஹில் பரமபதமடைந்தார். அவரால் ஸ்தாபித்த கோட்பாட்டின் முக்கிய கருத்தென்னவெனில், பிராம்மணர்முதல், பறையர் வரையில் யாதொரு ஜாதிபேதம் பாராட்டாமல் சகோதரத்தன்மையிற் கலந்து ஞானத்தைப் பெற்று கைவல்லியமடைய வேண்டுமென்பதேயாம்.

———o———

ஸ்ரீமதி காரைக்காலம்மை.

சோழமண்டலத்திலே காரைக்கால் என்னும் கிராமத்தில் வைசிய ஜாதியில் தனதத்தன் என்பவனுக்குப் புனிதவதி என்னும் பெயர்வகித்த புத்திரி யிருந்தார். அச்சிறுமியை நாகப்பட்டணத்திலிருந்த நிதிபதி என்பவரின் புத்திரனாகிய பரமதத்தனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து, அவர்களிருவர்களையும் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டார். அந்தப் புனிதவதியார் பரமபத்தர்கள், சாதுக்கள் தம்மில்லிடம் தேடிவந்தால் பக்திவினயமாய் திருவமுது, வஸ்திரம் முதலியவைகளைத்தந்து உபசரித்து வருவார். இவ்வாறு அவர் குடும்பகாரியம் நடந்து வரும்போது, ஓர்நாள் பரமதத்தினிடத்திற்கு வந்திருந்த சிலர் அவருக்கு இரண்டு மாம்பழம் கொடுக்க, அவைகளை வாங்கி, தன் மனைவியிடம் கொடுத்தனுப்பினர். அவர் மனைவி அப்பழங்களை வாங்கி வைத்துக்கொண்டு, ஓர்நாள் ஓர் சாது

தம்மிடம் பசியினால் வருந்திவந்தமையால், அவருக்குசாதம் புசிக்கத்தந்தகாலையில், அந்த மாம்பழங்களிலொன்றைகொடுத்தனர். ஓர்தினம் பரமதத்தன் போஜனம்செய்யும்போது ஒரு மாம்பழத்தைக் கொண்டுவந்து வைத்தார். அதைபார்வையிட்டவுடன், மற்றொரு பழத்தையும் கொண்டுவாவென்றனர். உடனே அம்மாது மனதில் களங்கமின்றி ஈஸ்வரனைத் தியானிக்க உடனே ஓர் மாங்கனி அவர் கையில் வந்திருந்தது. அதைத் தன்புருடனுக்குக் கொடுக்க அதை அவர் புசித்து அதின் சுவை சிறந்ததாயிருக்க ஆச்சரியப்பட்டு, இப்பழம் நீ எங்கேபெற்றாய் என்றார் மனைவி நீங்கள் கொடுத்த பழங்களி லொன்றை ஓர் சாதுவுக்குத்தந்து விட்டமையால், அதற்கு யான் என்ன செய்வேனென்று ஈஸ்வரனைத் தியானிக்க அவர் அருளினால் இப்பழம் என்னிடம் காணப்பட்டதென்றார். பரமதத்தன் அதை நம்பாமல் மனைவியை நோக்கி இக்கனி பரமசிவன் கிருபையால் கிடைத்ததாயிருந்தால் மற்றொரு கனியைப் பெறச்செய் என்றனர். உடனே புனிதவதியார் தியானிக்க ஒரு மாங்கனி வந்திருந்தது. இம்மகிமையைக்கண்ட புருடன் ஆண்டவன் கிருபையைப் பெற்றவளென்று மதித்தான். புனிதவதியுடன் கூடிவாழ பரமதத்தன் அஞ்சி தேசயாத்திரை செய்துவரும்போது மார்க்கத்தில் ஓர் நகரத்திலிருந்த ஓர் வைசியன் மகளை விவாகஞ் செய்துக்கொண்டு வாழ்ந்திருந்தான். இவனுக்குப் பிறந்த குமார்த்திக்கு தன் மூத்த மனைவியின் பெயராகிய புனிதவதி என்னும் நாமகரணஞ் செய்தனர். சிலநாள் கழிந்தபின் தன்வரவை யெதிர்பார்த்திருந்த தன் மூத்த மனைவியையும் பந்துக்களையும் தரிசிக்க தன் இரண்டாவது மனைவியோடும் குமார்த்தியோடுஞ் சென்று புனிதவதியாரை நமஸ்கரித்தனர். அதைக்கண்ட மற்றவர்கள் இது என்ன புதுமையென்று கேட்டார்கள். அப்போது பரமதத்தன் தான் தன் மனைவியாகிய புனிதவதியாரிடம்கண்ட அதிசயத்தைச்சொல்ல அனைவரும் திகைத்தார்கள். அக்காலத்தில் புனிதவதியார் தன்னைவிட்டுப் பிரிந்திருந்த புருடனாகிய பரமதத்தனை தரிசித்ததற்கு மனமகிழ்ந்து சிவபதமடைவதே தகுதியெனமதித்து சிவபெருமானை பூரணமாய் தியானிக்கத்தொடங்கினர். அச்சமயத்தில் பக்தி ஞானம் மேலிட்டு "அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, கொங்கை தீரங்கி, எட்டிஅலவமீகை" என்னும் திவ்விய கிரந்தங்களை யியற்றி சிவபெருமான் சந்நிதானமடைந்தனர்.

வராகமிகிரன்.

இந்து தேசத்தில் வராகமிகிரன் என்னும் ஓர் சோதிஷசாஸ்திரி யிருந்தார். இவரால் லகு சாதகம், பிரஹத்ஸம்ஹிதை, பிரஹத்சாதகம் முதலிய சிறந்த புத்தகங்கள் இயற்றப்பட்டன. இவர் அமரசிம்மன் என்பவருக்கு 200௵ முன்னர் ஜீவித்திருந்தவர். புறதேசங்களைவிட இத்தேசத்தில் 1500 வருடங்களுக்கு முன் வானசாஸ்திரமிருந்தது. இத்தேசத்திற்கு அந்நிய தேசத்தார்வந்து அந்த சாஸ்திரத்தைக் கொண்டுபோய் தாங்களேதோ நவமாய்க்கண்டு பிடித்ததாகக் காட்டுகிறார்கள். ஆயினும் ஆங்கிலேயே வருடம் 504-ல் மேற்படி சாஸ்திரியார் பிறந்து 587௵ வரையில் உயிருடனிருந்ததாகத் தோன்றுகிறது. இச்சிறந்த சாஸ்திரியாரால் பாம்பு கிரணங்களை விழுங்குவதாய் பிரஜைகள் அபிப்பிராயப்பட்டிருந்தவற்றை ஆராய்ந்து கிரகங்கள் சுற்றிவரும்போது ஓர் கிரகம் மற்றொரு கிரகத்தை மறைத்த காலையில் காணும் நிழலேயல்லது மற்றொன்று மல்லவென சீர்தூக்கி வெளியிட்டனர். இது இச்சாஸ்திரியால் நமக்குத் தெரியவந்ததேயன்றி ஆங்கிலேயரால் தெரியவந்த தென்பது அறியாமை. அந்த சாஸ்திரியார் 86 வருடங்கள் ஜீவித்து தம் காலத்தை வீணாக்காமல் சோதிஷ சாஸ்திரத்தை நிலைநாட்டினமைக்கு யாம் எவ்வளவு வந்தனங் கூறினும் அவரெடுத்துக்கொண்ட கஷ்டத்திற் கிணையாகாது.

தார்மீக தைரியம்.

(1) உன் கைவசத்தில் பணம் உண்டாயிருக்கும்போது, உன் கடனைத் தீர்த்துவிடத் தைரியங்கொள். (2) உனக்கு அவசியமில்லாத ஒன்று உன் கண்களுக்கு எவ்வளவு இச்சையை உண்டாக்கினாலும், அதைத் தவிர்த்துவிடத் தைரியங்கொள். (3) அலங்கார உடைதரித்த ஓர் ஐசுவரியவானோடு நீ சவகாசமாயிருந்தாலும், உன் சந்தமற்ற உடையோடே அவனிடத்தில் பேசத் தைரியங்கொள். (4) ஒரு மனிதனை நீ நம்பாதிருக்கிற காரணத்தை அவனுக்கு வெளிப்படையாய்ச்சொல்ல தைரியங்கொள். (5) யாரிடத்திலாவது என்ன கோலத்திலாவது உண்மைக்கு மரியாதை செலுத்தவும் நாணயக்கேடு வஞ்சகங்களை இகழவும் தைரியங்கொள். (6) புதிய வஸ்திரங்களுக்கு நீ விலை கொடுக்கக்கூடியவனாயில் பழைய வஸ்திரங்களைத்தரிக்கத் தைரியங்கொள். (7) சகல காரியங்களிலும் மினுக்கு வேஷத்தைவிடச் சுகத்தையும் தகுதியையும் முக்கியமென்று நினைக்கத் தைரியங்கொள்.—(தே—ரி.)